பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 13 செவ்வாய்க்கிழமை 25.02.2025 கதிர் 109

## இனி அது ரகசியம் அல்ல!

இந்தியாவின் அதானி நிறுவனம் மன்னாரில் தொடங்க இருந்த காற்றாலைத்திட்டம் மற்றும் பூநகரியில் தொடங்க இருந்த சூரியமின் உற்பத்தித் திட்டம் ஆகியவற்றிலிருந்து ☞ 2

# மீனவர்களைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு தவறிவிட்டது

## மன்னார் மீனவர் சங்க செயலர் ஆதங்கம்

இந்திய அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு தவறியுள்ளது என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ச்சியாக கைதுசெய்து வருகின்றனர். இலங்கை அரசை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையிலே இலங்கை கடல் பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

இந்தக் கைது நடவடிக்கைகள் ஊடாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை கட்டுப்படுத்தப்படுகின்றதா? என்ற விடயம் கேள்விக்குறியாகவே இருக்கிறது. எமது கடல் எல்லையை தாண்டி வராதீர்கள் என்ற விடயத்தை நாங்கள் தொடர்ந்தும் இந்திய மீனவர்களுக்கு அழுத்தமாக தெரிவித்து வருகின்றோம். இந்திய அரசுக்கும் தெரியப்படுத்தி உள்ளோம். தமிழ்நாடு அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் ☞ 2

# வறண்ட காலநிலை தொடர்ந்தால் மின்சாரக் கட்டணங்கள் உயரும்

## மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

தற்போதைய வறண்ட வானிலை நிலைமைகள் தொடர்ந்து நீடித்தால் மின்சாரக் கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக்கும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பொறியியலாளர்களின் சந்திப்பில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றிய போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணங்களை 20 சதவீதத்தால் குறைத்தோம். ஆனால், வறட்சி இப்படியே சென்றால் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எங்களுக்கு ☞ 8

# கணேமுல்ல சஞ்சீவ கொலை: சாட்சியப் பதிவுகள் தொடங்கின

கணேமுல்ல சஞ்சீவ படுகொலை சம்பவம் தொடர்பான இறப்பு விசாரணை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த விசாரணை தொடர்பான சாட்சியங்கள் கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.

இதன்போது, கொழும்பு குற்றப்பிரிவின் பொலிஸ் சார்ஜென்ட் பண்டாரவின் வழிகாட்டுதலின் கீழ், துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் நீதிமன்ற ☞ 8

# தோட்ட மக்களுக்கான ஒதுக்கீட்டில் அரைவாசி இந்திய அரசினுடையது

மனோ கணேசன் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

ஆளும்தரப்பு தோட்ட மக்களுக்கு ஒதுக்கி இருப்பதாக தெரிவிக்கும் 7322 மில்லியன் ரூபாவில் 4100 மில்லியன் ரூபா இந்திய அரசால் ஒதுக்கப்பட்டதாகும். வீட்டுத் திட்டத்துக்கான இந்திய அரசாங்கத்தின் 3500 மில்லியன் ரூபாவும் நாங்கள் இந்திய அரசுடன் கலந்துரையாடி பெற்றுக்கொடுத்ததாகும். அந்த பெருமை எங்களுக்கே சேரவேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அனைத்துத் துறைகளிலும் பின்தங்கிய மக்களாக இருப்பது பெருந்தோட்ட மக்கள் என்பது ஜனாதிபதிக்கு தெரியும். ஆனால் வரவு ☞ 8

## நழுவும் ஆளும்தரப்பு;

# வாய்ப்புக் கிடைக்கும்போது அரசமைப்பு உருவாக்கம்

## அதுவரை மாற்றமில்லாத 13

**புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் வரை அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மாற்றமில்லாமல் அமுல்படுத்தப்படும். வாய்ப்பு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் பொதுஜன அபிப்ராயத்துக்கு போதுமான காலவகாசம் வழங்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் விரிவான கலந்துரையாடலுடன் புதிய அரசியலமைப்பினை உருவாக்க தயாராகவே இருக்கிறோம். இதற்கு முன்னர் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும், சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**பொருளாதார பாதிப்புக்கு மத்தியில்தான் ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.** ☞ 2

# கிழக்கின் அபிவிருத்தியை துரிதப்படுத்த நடவடிக்கை

## தேவை என்கிறார் ரிஷாத் எம்.பி



வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்படவில்லை என்ற நிலைப்பாட்டை ஊடகங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன. வடக்கு மாகாணத்தை போன்று கிழக்கு மாகாணமும் போரால் பாதிக்கப்பட்டது. இந்திய நிதியுதவியுடன் கிழக்கு மாகாணம் அபிவிருத்தி செய்யப்படும் என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அபிவிருத்தி ☞ 2

# பாதாள குழுக்களிடையிலான மோதல் அச்சுறுத்தலாக இடமளிக்கமாட்டோம்

## பிரதமர் அறிவிப்பு



பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் வரைக்கும் அதிகரிக்க நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. இதற்காக நாங்கள் முறையான பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய ☞ 2

# பொலிஸ் காவல் கொலைகள் குறித்து பக்கச் சார்பற்ற விசாரணை தேவை

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

நாட்டின் சட்டவாட்சி மீது வலுவான அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ள அண்மைய பொலிஸ் காவலின் கீழான கொலைச் சம்பவங்கள் தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இச்சம்பவங்கள் குறித்து உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அச்சத்தையும் தோற்றுவிக்கும் வகையில் அண்மையில் பதிவான கொலைச் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தேகொட மற்றும் செயலாளர் சத்துர கல்ஹென ஆகியோரின் ☞ 8

# பிரதமர் கண்டனம்

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு முன்னெடுக்கும். ஆனால் தற்போதுள்ள நிலைமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி குறுகிய அரசியல் இலாபங்களை பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் தரப்பினரை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எமது ஆளும்தரப்பு முன்னெடுக்கும். அனைத்துச் சம்பவங்கள் ☞ 2

## கணே-முல்ல சஞ்சீவ கொலையில்

# பதில் பொலிஸ் மா அதிபரை சாடும் உதய கம்மன்பில

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கும் தொடர்பிருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகிறது. எனவே தகவல் கிடைத்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய பதில் பொலிஸ் மா அதிபர் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரவி செனவிரத்ன நடவடிக்கை எடுப்பாரா? என்று பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

விலகியது முதல் இலங்கை இந்திய உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறும் இந்திய மீனவர் படகுகள் தொடர்ந்து கைப்பற்றப்படுவதும் நிலைமையைச் சிக்கலுக்குள்ளாக்குகின்றன.

இப்படி இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய உறவுச் சிக்கல்களைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள ரணில் எடுத்த முயற்சிக்கு இந்தியா ஆப்பு வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மிகச் சமீபத்தில் கடல்சார் பாதுகாப்புக் குறித்த இந்து சமுத்திர மாநாடு அண்மையில் நடந்தது. முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பிற முன்னாள் பிரமுகர்கள் இதுபோன்ற மாநாடுகளில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள், ரணிலும் அழைக்கப்பட்டிருந்தார். இது வழக்கமாக ஒரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் ஒரு சாதாரண அழைப்பாகும். ஆனால் இதைப் பயன்படுத்திக் கொண்டு, அதானி பிரச்சினையில் ஆளும்தரப்புக்கும் இந்தியாவிற்கும் இடையே ஒரு கடுமையான நெருக்கடி எழுந்துள்ளது என்பதை நாட்டிற்குக் காட்டவும், 'நான் மீட்பர் - இந்தியா என்னுடன் உள்ளது - ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், இந்தியா என்னைச் சமாளிக்கும்...' என்பதை நாட்டிற்குக் காட்டவும், அரசியலில் தொடர்ந்து தீவிரமாக செயல்படுவேன் என்பதை நிறுவவும் ரணில் திட்டமிட்டார்.

இந்த மாநாட்டில் வெளியுறவு அமைச்சர் விஜிதா ஹேரத்தும் கலந்துகொண்டிருந்தார். அவரும் ரணிலும் ஒரே ஹோட்டலில்தான் தங்கியிருந்தனர். அதை ரணில் அறிந்திருந்தார். மாநாட்டில் கலந்துகொண்டுளப்படியாவது விஜித ஹேரத்துடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு அதை வெளியிட்டு, ஆளும்தரப்பினர் தனது உதவியில்தான் தங்கியிருக்கின்றது என்று காட்ட முயன்றிருக்கின்றார்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ரணில் எப்படியாவது விஜிதாவைச் சந்தித்து அவருடன் புகைப்படம் எடுத்து சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களுக்கு கசியவிட முயன்றார். இந்தப் பயணத்தின்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் விஜிதாவையும் ரணிலையும் தனித்தனியாக சந்தித்து பேச்சினார். கடைசியில் அந்தப் படங்கள்தான் வெளியாகின.

ரணில் ஓமானில் விளையாடப் போகும் இந்த விளையாட்டு பற்றி அனுராவுக்கும் தெரியவந்தது. தொலைபேசி மூலம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓமானுக்கு வந்த ரணிலும் விஜிதாவும் ஒரே ஹோட்டலில் தங்கியிருப்பதாகவும், ரணில் எப்படியோ விஜிதாவுடன் புகைப்படம் எடுக்க முயற்சிப்பதாகவும் அந்த அழைப்பில் கூறப்பட்டது. இந்த அழைப்பு வந்த உடனேயே, அனுரா ஓமானுககு அழைப்பெடுதது ரணிலின் திட்டம் குறித்து விஜிதாவுக்குத் தெரிவித்துள்ளார். இதனால் விஜிதா ஓமான் பயணம் முழுவதும் ரணிலிடமிருந்து தூரத்தை வைத்திருந்தார். குறிப்பாக நிகழ்வின் இறுதியில், அதில் பங்கேற்ற விருந்தினர்கள் குழு புகைப்படத்திற்கு போஸ் கொடுத்தபோது, விஜிதா ரணிலிலிருந்து வெகு தொலைவில் போஸ் கொடுத்தார்.

இந்தப் பின்னணியிலேயே இந்திய அரசுப் பக்கம் இருந்து இலங்கையின் ஆளும்தரப்புக்கும் இந்திய ஆளும்தரப்புக்கும் இடையில் ரணில் ஆட முயற்சிக்கும் ஆடு புலி ஆட்டத்திற்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இந்தியா ஏதோ ஒரு மூன்றாம் தரப்பு மூலம் ரணிலுக்கு இந்த எச்சரிக்கையை வழங்கியதாக இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தியா தன்னுடனேயே இருப்பதாகக் காட்டிக்கொள்ளவேண்டாம் என்றும் நாட்டை தவறாக வழிநடத்த வேண்டாம் என்றும் இந்தியாவால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

இருந்தாலும் ரணில் இந்த மிரட்டலுக்கெல்லாம் பணிந்துபோகக்கூடியவரா என்ன? அடுத்த யாரை எப்படிக் கவிழ்க்கலாம் என்ற அவரது மூளை திட்டமிடுவதை நிறுத்தாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வாய்ப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வரவு செலவுத் திட்டம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடையது, சர்வதேச நாணய நிதியத்தினுடையது என்று எதிர்கட்சிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அத்துடன் வரவு செலவுத் திட்டத்துக்கு பல பெயர்களையும் சூட்டுகிறார்கள். மக்களுக்குப் பயனுடையதாக அமைந்தால் வேண்டிய பெயரை எதிர்க்கட்சிகள் பாதீட்டுக்கு சூட்டிக் கொள்ளட்டும்.

நாட்டுமக்களின் நலனைகருத்திற்கொண்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் அனைத்து மக்களும் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிவாரண வழங்கலுக்கான முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. எந்த தரப்பினரும் புறக்கணிக்கப்படவில்லை.

வரவு செலவுத்திட்டத்தில் புதிய அரசமைப்பு தொடர்பில் குறிப்பிடப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும் வரை அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அதிகரிக்காமலும், குறைக்காமலும் எவ்வித மாற்றமில்லாத வகையிலும் செயற்படுத்தப்படும். சிறந்த வாய்ப்பு கிடைக்கப் பெறும் முதல் சந்தர்ப்பத்தில் பொதுமக்களின் அபிப்ராயங்களுக்கும், நாடாளுமன்ற ஆலோசனைக்கும் போதுமான காலவகாசம் வழங்கப்பட்டு புதிய அரசமைப்பினை உருவாக்குவோம், அதற்குத் தயாராகவே உள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முன்னர் பொருளாதாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் புதிய அரசமைப்பை சிறந்த முறையில் இயற்ற முடியும். ஆகவே தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கமைய, புதிய யாப்பினை உருவாக்குவோம்.

அரச சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத்துறைக்கு அதிக நிதி இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த அரசசேவையாளர்களின் சம்பளம் 80 சதவீதத்தால் வளர்ச்சிப் பெறும்.வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் செயற்படுத்தப்படும் என்ற அச்சத்தில் தான் எதிர்க்கட்சிகள் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன என்றார்.

## மீனவர்களைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்தத் தவறியுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கான அனுமதிச் சிட்டையில் இந்திய கடல் எல்லையை தாண்டாதீர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் அவர்கள் விதி முறைகளை மீறி இந்திய கடல் எல்லையை தாண்டி இலங்கை கடல் எல்லையில் வந்து எமது கரையோர பகுதிகளில் மீன்பிடித்து விட்டுச் செல்கின்றனர்.

அப்படி அததுமீறி நுழைகின்ற நிலையிலே தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் இலங்கை கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்படுகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்துமீறி நுழைந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த 32 மீனவர்களின் நிலை எமக்கு வேதனையாகவே உள்ளது. சக மீனவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் கைதிற்காக நாங்கள் வேதனை அடைகிறோம். எனினும் கடற்படை முன்னெடுக்கும் கைது நடவடிக்கைகளை நாங்கள் எதிர்க்க முடியாது. குறித்த நடவடிக்கை மூலமாகவே எமது கடல் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

தமிழ்நாடு அரசு மீனவர்கள் விடயத்தில் அக்கறை செலுத்தவேண்டும். எல்லை தாண்டுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது எல்லை தாண்டும் இந்திய மீனவர்களுக்கு தமிழ்நாடு அரசு தண்டனை வழங்கவேண்டும். எதிர்காலத்தில் பேச்சு முன்னெடுப்பதை விடுத்து எல்லை தாண்டும் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படும் சம்பவங்கள் இல்லாமல் போகவேண்டும். அதற்கு இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையை தாண்டாமல் இருப்பதே ஒரே தீர்வு - என்றார்.

## கிழக்கின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளை துரிதப்படுத்துமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஆளும் தரப்பினர் புகழ்வதைம், எதிர்த்தரப்பினர் அதற்கு எதிர்மறையான கருத்துக்களைக் குறிப்பிடுவதையும் அவதானிக்கமுடிகிறது. 75 ஆண்டுகால சாபத்தை முடிவுக்கு கொண்டு வருவோம் என்ற பல வாக்குறுதிகளை குறிப்பிட்டு 159 ஆசனங்களுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

நாட்டுமக்கள் இன மத பேத வேறுபாடின்றி ஆளும்தரப்பைத தெரிவு செய்துள்ளார்கள். ஆகவே மக்களின் அபிலாசைகளையும், எதிர்பார்ப்பையும் நிறைவேற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு.கடந்த ஆட்சியைப் போன்று பேசிக் கொண்டும், செயற்பட்டுக் கொண்டும் ஆளும்தரப்பு இருக்கக்கூடாது என்பது மக்களின் நிலைப்பாடாகும். கிடைக்கப்பெற்ற மக்களாணையை ஆளும்தரப்புச சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று மக்கள் கருதுகிறார்கள்.

வரவு செலவுத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்கு அதிக மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. விவசாயம் இந்த நாட்டின் பிரதான துறையாகும். விவசாயிகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக் கொள்கிறோம்.

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கிறேன். இது நீண்டகால கோரிக்கையின் வெற்றியாகும். மன்னார்-புத்தளம் பாதை முக்கியமானது. இந்த பாதையைப் புனரமைத்தால் வடக்கு- தெற்கு இணைப்புக்கு வசதியானதாக அமையும்.

சிலாவத்துறை பகுதியில் கலாசார மண்டபத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து 20 சதவீதமளவில் பணிகளை நிறைவு செய்தோம். கடந்த 4 ஆண்டு காலமாக இந்த நிர்மாணிப்பு இழுபறிநிலையில் உள்ளது. இதனையும் கருத்திற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தளம், மன்னார், கல்முனை பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் அஸ்ரப் வைத்தியசாலைக்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த பெரும்பாலானவர்கள் இன்றும் தனியார் காணிகளில் தற்காலிக குடியிறுப்புக்களை அமைத்து வாழ்கிறார்கள். இவர்களின் அடிப்படை தேவை விருத்திக்காக கடந்தகாலங்களில் 8 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. பல்வேறு காரணிகளால் இந்த நிதி மீளப்பெறப் பட்டது. ஆகவே இந்த நிதியை அந்த மக்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்படவில்லை என்ற நிலைப்பாட்டை ஊடகங்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. வடக்கு மாகாணத்தை போன்று கிழக்கு மாகாணமும் போரால் பாதிக்கப்பட்டது. இந்திய நிதியுதவியுடன் கிழக்கு மாகாணம் அபிவிருத்தி செய்யப்படும் என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## பாதாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து ஆற்றிய உரைக்குப் பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார், பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு எடுத்துவரும் நடவடிக்கைகளை சபைக்கு தெளிவுபடுத்துமாறு எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்தியிருந்தார்.

பிரதமர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் இந்த சபைக்கு பல தடவைகளைத் தெளிவுபடுத்தி இருக்கிறார். அதேபோன்று ஜனாதிபதியும் தெளிவுபடுத்தி இருக்கிறார். அதனால் இந்தச் சம்பவத்தை நாங்கள் மிகவும் பாரதூரமாகவே பார்க்கிறோம் பாதாள குழுக்களுக்கு இடையிலான மோதல் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அதிகரிக்கும் வரைக்கும் நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. இதற்காக நாங்கள் முறையான பல நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். இன்னும் எடுத்துவருகிறோம் என்றார்.

இதுதொடர்பில் அமைச்சரும் ஆளும்கட்சிப் பிரதமகொறடாவுமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததா-வது:

இடம்பெற்றுவரும் இந்தச் சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை, நாட்டு மக்களின் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் உச்சமட்டத்தில் கருத்திற்கொள்வதாக பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

திட்டமிட்ட குழுக்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதல் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்தி இருக்கிறார். அதேபோன்று பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனை குழுவில் ஜனாதிபதியும் தெளிவுபடுத்தி இருந்தார். இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுவருவதால் விசாரணை தகவல்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவித்து, விசாரணைகளை குழப்ப முடியாது. இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாக தெரிவித்து பொலிஸார், மற்றும் பாதுகாப்பு துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள்கூட கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் சிலரிடம் விசாரணை மேற்கொள்ளவும் இருக்கிறோம்.

அதனால் தேவையான தகவல்களை மாத்திரம் அடிக்கடி நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மேலதிக தகவல் தேவை என்றால் எதிர்வரும் 28ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சினதும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினதும் செலவுத் தலைப்பு மீதான விவாதம் இடம்பெறுகிறது. அப்போது விசாரணைகளுக்கு பாதிப்பு இல்லாத தகவல்களை முன்வைப்போம். அதனால் இடம்பெறும் விசாரணைகள் தொடர்பில் நம்பிக்கை கொள்ளுங்கள். விசாரணைகளில் இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## பிரதமர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிலும் உடனடியாக செயற்பட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தொடர்பில் தராதரம் பாராமல் உரிய நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆகவே எவரும் அச்சப்பட வேண்டிய தேவை கிடையாது.

எதிர்க்கட்சிகளுக்கு பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதற்காக ஒரு சில விடயங்களை தூக்கி பிடித்துக்கொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் உள்ள பலர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அவர்கள் இவ்வாறான விடயங்களை கூறி எம்மைச் சோர்வையடைச் செய்யப் பார்க்கின்றனர்.

நாம் நாட்டு மக்களுக்கு பொய் கூறவில்லை.நாம் என்ன செய்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மக்கள் நன்கறிவர். தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவ்வித சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. தேசிய பாதுகாப்பு தொடர்பில் போலியான விடயங்களை கூறி கடந்த காலங்களில் அரங்கேற்றப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாம் நன்கறிவோம்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை முதன்மைப்படுத்தி அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ளவும் ஆட்சியை உறுதிப்படுத்தவும் மேற்கொண்ட சதித்திட்டங்கள் தொடர்பில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சூழலை சுத்தப்படுத்துவது போல் எம் ஆட்சியின் கீழ் குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உறுதி

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை கடற்கரையை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'அழகான கடற்கரையின் பங்குதாரர்களாவோம்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டது. தூய்மையான இலங்கை எனும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே இதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கடற்றொழில், நீரியல் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டசெயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பூநகரி பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், இராணுவத்தினர், பொலிஸார், கடற்படையினர், மாணவர்கள், ஊர்மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். பிரதேச அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தன.

க்ளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் வெற்றியளிப்பதற்கு முழு அர்பணிப்புடன் செயற்படும் அரச அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்த அமைச்சர் இவ்விடத்தில் தனியார் பங்களிப்பும் இருந்தால் அது மேலும் சிறப்பாக அமையும் எனவும் தெரிவித்தார்.





அதைப்போல இந்த க்ளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் அனைத்து பகுதிகளிலும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கபடவுள்ளன.

நாடு முழுமையாக சுத்தம் செய்யப்பட வேண்டும் என்றால் குப்பைகளை அப்புறப்படுத்தல் மாத்திரம் அல்ல. இனவாதம், மதவாதம், ஊழல், மோசடிகளுக்கும் முடிவு கட்ட வேண்டும்.

எனவே, நாங்கள் சூழலை சுத்தப்படுத்துவது போல் எமது ஆட்சியின் கீழ் ஊழல்வாதிகள், மோசடியாளர்கள், கடத்தல்காரர்கள், கொலைகாரர்கள் ஆகியோரை சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதி தேவதை மூலம் சுத்தம் செய்யப்படுவார்கள் என



### உள்ளூராட்சிசபைத் தேர்தலில்

# நுவரெலியா மாவட்டத்தை கைப்பற்ற முயற்சிக்கிறோம்

### திகாம்பரம் எம்.பி. வியூகம்

(கிஷாந்தன்)



மலையக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சிக்கின்றோம் எனவும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி என்பவற்றின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல், ஹற்றன் டிகேடபிள்யூ மண்டபத்தில் ஞாயிறு நடைபெற்றது. இதில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதி செயலாளர் சோ.ஸ்ரீதரன், இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன், கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல், தற்போதைய அரசியல் நடப்புகள் பற்றி இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இச்சந்திப்பின் பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட திகாம்பரம் எம்.பி. கூறியவை வருமாறு -

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு நாம் தயாராகி வருகின்றோம். இது சம்பந்தமாக தோட்டத் தலைவர்கள் உட்பட கட்சி பிரமுகர்களுடன் கலந்துரையாடினோம்.

தற்போதைய அரசாங்கம் வாய்வீச்சு அரசாங்கமாகவே உள்ளது. செயலில் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

மலையக மக்கள் கடந்தமுறையும் தேசிய மக்கள் சக்திக்கு 50 ஆயிரம்வரையான வாக்குகளையே வழங்கினர். மலையகத்திலுள்ள கட்சிகளுக்குதான் கடந்தமுறையும் வாக்குகளை வழங்கினார்கள்.

மலையக மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும் என்றார்கள், எதிரணியில் இருக்கும்போது மலையக மக்கள் தொடர்பில் அதிகம் கதைத்தார்கள். தற்போது அதிகாரத்தில் இருக்கும்போது தீர்வை முன்வைக்காமல் உள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தில்கூட மலையகத்தக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியில்கூட இந்திய நிதியே பெருமளவு உள்ளது.

தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுகூட கைகூடுமா எனத் தெரியவில்லை. எனவே, தோட்டத்தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளராக்குவதன்மூலமே இந்த சம்பள பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணமுடியும். - என்றார்.

# பிராந்திய உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பான விசேட கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)



கல்முனை பிராந்திய உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பான விசேட மீளாய்வு கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த கூட்டம் சனிக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.லபீர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பொது சுகாதார பரிசோதர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



இதன்போது உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் சுகாதார வைத்திய அதிகாரிகளால் விளக்கக்காட்சிகளுடன் விளக்கவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்களை பதிவு செய்கின்ற போது சுகாதார ரீதியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்தும் கல்முனை மாநகர சபை ஆணையாளருடன் கலந்துரையாடுவது என இக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடும் விசேட கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பக்கச்சார்பற்ற விசாரணை தேவை

கனேமுல்ல சஞ்சீவவின் கொலையைத் தொடர்ந்து கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற தமிழ் வர்த்தகரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்கள் காவல்துறையினரால் 'என்கவுண்டர்' பாணியில் சுட்டுக்கொல்லப்பட்டனர். மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை எடுக்கச் சென்ற சமயம் சந்தேகநபர்கள் காவல்துறையினரைச் சுட முயன்றார்கள் என்றும் பதிலுக்குப் பொலிஸார் சுட்டதில் அவர்கள் உயிரிழந்தனர் என்றும் வழக்கமான ஒரு கதையை காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நாட்டின் சட்டவாட்சி மீது வலுவான அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இச்சம்பவங்கள் குறித்து உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் காவல் மா அதிபரிடம் வலியுறுத்தியுமுள்ளது.

''பெப்ரவரி 19 கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்குள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலின் கீழிருந்த சந்தேகநபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து பெப்ரவரி 21 இரவு பொலிஸ் காவலின் கீழிருந்த 2 சந்தேநபர்கள் தப்பிக்க முற்பட்டனர் எனக்கூறி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்கள் இருவரும் அன்றைய தினம் கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

நாட்டின் சட்டவாட்சி மீது வலுவான அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ள இத்தொடர் சம்பவங்கள் குறித்து நாம் தீவிர கரிசனையடைகின்றோம். சட்டக் கட்டமைப்பின் மீது பொதுமக்கள்கொண்டிருக்கும்நம்பிக்கையைசீர்குலைக்கக்கூடிய இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்குப் பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட சட்ட அமுலாக்கப் பிரிவினர் பெரும் அவதானத்துடனும், மிகுந்த பொறுப்புடனும் செயற்படவேண்டியது அவசியமாகும்.

அதேவேளை கடந்த காலங்களிலும் இதுபோன்ற பொலிஸ் காவலின்கீழானகொலைகள்இடம்பெற்றதுடன், அவைதொடர்பில் முறையான விசாரணைகளோ அல்லது குற்றவாளிகளை நீதியின்முன் நிறுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்படவில்லை என்பதை கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றோம். இவ்விடயத்தில் சட்ட அமுலாக்கஅதிகாரிகளால்உரியநடவடிக்கைகள்எடுக்கப்படாததன் விளைவாக, தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு மேலோங்கியிருப்பதாக அரசின் மீது குற்றஞ்சுமத்தும் நிலை தோற்றம்பெற்றுள்ளது. அதுமாத்திரமன்றி இத்தகைய தோல்வி நாட்டின் நீதி நிர்வாகம் கேள்விக்கு உட்படுத்தப்படுவதற்கும், அதன் செயற்திறன் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழப்பதற்கும் வழிகோலியுள்ளது'' என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறு சட்டம் ஒழுங்கு காவலர்களால் நிகழ்த்தப்படும் தண்டனை நிறைவேற்றல் பாணியிலான, நீதிக்குப் புறம்பானகொலைகள்குறித்துக்கடந்தகாலங்களிலும்முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு எவரும் தண்டிக்கப்பட்டதில்லை. அப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த இன்றைய அரசுத் தலைவரும் அவர் சார்ந்த கட்சியினரும் அதனை வன்மையாகக் கண்டித்தனர். ஆளும்தரப்பினரின் அடக்குமுறைக்கு இத்தகைய சம்பவங்கள் சாட்சி என்று சாடினர். ஆனால் இன்று அதே சம்பவங்கள் அவர்களது ஆட்சியில் நிகழும்போது எந்தவித எதிர்ப்பும் இன்றி அமைதி காக்கின்றனர்.

நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படாத எந்தவொரு நபரும் முனகூட்டியே குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. எந்த ஆட்சியிலாயினும் அது தவறான நடவடிக்கையே. எனவே இந்த விடயத்தில் சட்டத் தரணிகள் சங்கம் கேட்பதைப்போன்று பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்று நடத்தப்பட்டு தவறிழைத்த அதிகாரிகள் கண்டறியப்படவேண்டும். அவர்கள் மீது நீதி நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும்.

நீதிக்குப் புறம்பான சட்டவிரோத படுகொலைகள் ஒருபோதும் அதிகரித்துவரும் குற்றச்செயல்களுக்கான தீர்வாக அமையாது. மாறாக அரசு சட்டத்தின் ஆட்சிக்கு அமைவாக இயங்குவதன் ஊடாகவே குற்றங்களைக் கட்டுப்படுத்தமுடியும்.

# டிரம்ப் ஆதிக்கத்தால் அதிரும் உலகம்

**ராவ்**

மனித குலத்துக்கே மிகவும் அழிவுகரமான முடிவை எடுக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்த இடத்தில் இருக்கிறார் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப். அவரது தலைமையில் இயங்கும் அமெரிக்கா நினைத்தால் உலகின் எந்த நாட்டின் தலைவிதியையும் மாற்ற முடியும் என்ற அளவுக்கு பலம் வாய்ந்த நாடாகத் திகழ்கிறது. எனவே, டிரம்ப்பின் கருத்துகளையும், பேச்சுகளையும் அவ்வளவு எளிதில் யாரும் புறந்தள்ளிவிடமுடியாது.

அமெரிக்கா உலக அரங்கில் புறக்கணிக்கமுடியாத அளவுக்கு பெரிய அம்பானியின் நிகர சொத்து மதிப்பான 120 பில்லியன் டொலர்களைவிட, 40 பில்லியன் டொலர்கள் குறைவு. மற்றொரு குறிப்பிடத்தக்க பொருளாதாரப் புள்ளிவிவரம் என்னவென்றால், உலக அந்நியச் செலாவணி கையிருப்பில் அமெரிக்க டொலரின் பங்கு சுமார் 58 சதவீதம் ஆகும். இது 20 ஆண்டுகளுக்கு முன்பு 70 சதவீதமாக இருந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, உலகளாவிய 'ஃபயர் பவர்' (ராணுவ பலம்) குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு 800 பில்லியன் டொலருக்கு மேல் ராணுவத்துக்காக செலவிடுகிறது. 2011-ஆம்



நாடாகவும் உள்ளது. அதன் புவியியல் பரப்பளவு 9.53 மில்லியன் சதுர கிலோ மீற்றர்கள். இது உலகின் மொத்த நிலப்பரப்பில் 6.4 சதவீதம் என்றாலும், இந்தியாவை விட மூன்று மடங்கு பெரியது. பிரிட்டனைவிட 40 மடங்கு மற்றும் ஜெர்மனியை விட 27 மடங்கு பெரியது என்பதை நினைவில்கொள்ளவேண்டும்.

இந்த புவி பரப்பளவு அளவீட்டைவிட முக்கியமானது அமெரிக்காவின் பொருளாதார பலம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி). உலக வங்கியின் தரவுகளின்படி, 2023 அமெரிக்க பொருளாதார மதிப்பு 27.72 டிரில்லியன் டொலராகும். ஒட்டுமொத்த உலகின் பொருளாதார மதிப்பு 106.17 டிரில்லியன் டொலர்.

உலக மக்கள்தொகையில் 4 சதவீதம் பேரை மட்டுமே கொண்டுள்ள நாடு, பொருளாதாரத்தில் 25 சதவீதத்துக்கு மேல் பங்களிக்கிறது. 2020 கணக்கெடுப்புப்படி அமெரிக்க மக்கள் எண்ணிக்கை சுமார் 33 கோடியாகும்.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனா 17.79 டிரில்லியன் டொலர் மதிப்புடன் மிகப்பெரிய பொருளாதார நாடாக இருந்தாலும், அமெரிக்காவைவிட 4 மடங்கு அளவுக்கு மக்கள்தொகையைக் கொண்டுள்ளதால் அதன் தலா வருமானம் குறைவாக உள்ளது.

அமெரிக்காவைவிட தலா வருமானம் அதிகம் இருக்கும் நாடுகளும் சில இருக்கலாம். ஆனால், அமெரிக்காவின் பொருளாதார பலத்துடன் அவற்றை ஒப்பிட முடியாது. உதாரணமாக, 6.45 லட்சம் மக்கள்தொகை மற்றும் 2,586 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட லக்ஸம்பர்க், அதிகபட்சதனிநபர் வருமானத்தைக் கொண்டுள்ளது. ஆனால் அதன் மொத்த பொருளாதார மதிப்பு 81.2 பில்லியன் டொலர்கள் மட்டும்தான். இது இந்திய தொழிலதிபர் முகேஷ்

ஆண்டு கணக்கெடுப்புப்படி உலக அளவில் ராணுவத்துக்காக செலவிடப்படும் நிதியில் 39 சதவீதம் அமெரிக்காவின் பங்காக உள்ளது. அமெரிக்கா வெளிநாடுகளில் இருந்து ராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்யும் நாடல்ல. ஆயுத உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றதுடன், மிகப்பெரிய ஆயுத ஏற்றுமதியாளராகவும் திகழ்கிறது. ஆனால், 80 நாடுகளில் 750 இடங்களில் அமெரிக்க ராணுவ நிலைகள் உள்ளன. இது நேட்டோ அமைப்புடன் கூடிய உடனடி பதிலடி நடவடிக்கைகளுக்கான தளங்களாகும்.

5,000-க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் அமெரிக்காவில் உள்ளன. உலக அணு ஆயுதங்களில் 88 சதவீதத்துக்கு மேல் அமெரிக்கா மற்றும் ரஷியாவிடம் உள்ளது. இதில் அமெரிக்காவின் பங்கு பாதிக்கு மேல் உள்ளது. இவைதான் அமெரிக்கா எவ்வித ஐயத்துக்கும் இடமின்றி உலகின் முதன்மையான வல்லரசு நாடாக திகழக் காரணம்.

அதே நேரத்தில், அந்நாடு சமத்துவம், சகோதரத்துவம், மனிதநேயம், உலக அமைதி ஆகிய அதன் அடிப்படைக் கொள்கைகளை மறந்து அதன் ஆணவத்துக்கு இடம் கொடுத்தால் அது உலகுக்கு மட்டுமின்றி, அந்நாட்டு மக்களுக்கும் ஆபத்தாக முடியும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் செயல்பாடுகள் அச்சமூட்டுவதாக உள்ளது. அவரது நிர்வாகம் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களைக் கையாளும்விதம், அவர்வசமுள்ள கட்டுப்பாடற்ற அதிகாரத்தின் மனிதாபிமானமற்ற மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்க ராணுவ விமானத்தில் பல நாட்டவர்களையும் நாடுகடத்தியமை இதயத்தைக் கனக்கச் செய்வதாக இருந்தது. எந்த அளவுக்கு மனிதாபிமானமற்ற தன்மையயுடன் செயல்பட முடியும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# டிரம்ப் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

என்பதையும் காட்டியது. பயணத்தின்போது அவர்கள் முழுமையாக கைவிலங்கிடப்பட்டிருந்தனர்.

நாடு கடத்துவதற்கு வேறு முறைகளைப் பயன்படுத்தி இருக்க முடியாதா? நாம் நாகரிக சமுதாயத்தில் வாழவில்லையா? இருநாட்டு அரசுகளும் முன்கூட்டியே பேச்சு நடத்தி கண்ணியத்துடனும், மனித உரிமைகளை மீறாமலும் நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம்.



இந்தச் சோகம் முடியப் போவதில்லை. நாடு கடத்தப்படுவது புதிதல்ல. கடந்த 2009-ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவில் இருந்து பல ஆயிரக்கணக்கானவர்கள் நாடு கடத்தப்படடட்டடுள்ளனர். ஆயினும்கூட, இப்போதுள்ளதைப் போன்று மனிதாபிமானம் இன்றி நடத்தப்படவில்லை. ஆட்டுமந்தைகளைப் போன்று ஏற்றி அனுப்பவில்லை.

அடிப்படையில் அமெரிக்காவே புலம்பெயர்ந்தோரால் உருவான நாடுதான். பூர்விக அமெரிக்கர்கள் அந்நாட்டு மக்கள் தொகையில் 2 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளனர்.

எனவே, அந்நாட்டின் வரலாற்றின்படி, குற்றப் பின்னணி இல்லாத புலம்பெயர்ந்தோரிடம் அனுதாபம் காட்டுவதுடன், அவர்களை மனிதாபிமான முறையுடன் கையாள வேண்டும். ஆனால் டிரம்ப்பின் தேர்தல் வாக்குறுதியானது, அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் அனைவரையும் அதாவது சுமார் 1.2 கோடி மக்களை வெளியேற்றுவதாக இருந்தது. அவர்களில் பெரும்பாலோர் மத்திய அமெரிக்கா மற்றும் மெக்ஸிகோவிலிருந்து வந்தவர்கள். மற்ற நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளை அமெரிக்க நிர்வாகம் எவ்வாறு கையாளப் போகிறது என்பதை அதன் நட்பு நாடான இந்தியாவுக்கு நாடு கடத்திய விதத்தை பார்த்த பிறகு ஊகிப்பது கடினம் அல்ல.

சட்டவிரோத குடியேறிகளால் ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தடுப்பது, போதைப்பொருள்கள் அமெரிக்காவுக்குள் நுழையாமல் தடுப்பது என்ற பெயரில் பல்வேறு அவசரகால நடவடிக்கைகளை டிரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் முக்கிய வர்த்தக நாடுகளான சீனா, கனடா, மெக்ஸிகோ மீது கடுமையான இறக்குமதி வரி உயர்வை அறிவித்தார். அமெரிக்கா வர்த்தகப் பற்றாக்குறையில் உள்ளது. இதனை சரி செய்வதற்கே இந்த நடவடிக்கை என்று விளக்கினார். ஆனால், இறக்குமதி வரி உயர்வால் அமெரிக்காவில் கடுமையான விலைவாசி உயர்வு ஏற்படும் என்பதை புறந்தள்ளிவிட்டு, ஏற்றுமதி நாடுகளுக்கு நெருக்கடி அளிக்கவே முயற்சித்தார். சீனா மீதான இறக்குமதி வரி உயர்வு நடைமுறைக்கு வந்துவிட்ட நிலையில், மெக்ஸிகோ, கனடா மீதான நடவடிக்கை ஒரு மாதத்தில் தொடங்கும் என்று தெரிகிறது.

இதன் தாக்கம் அமெரிக்காவில் மட்டும் எதிரொலிக்காமல், பிற நாடுகளையும், உலக வர்த்தகத்தையும் பாதிக்கும். 'உலகமே ஒரு குடும்பம்' என்பதை நாகரிக உலகம் விரும்புகிறது. ஆனால், 'அமெரிக்காவுக்கு முன்னுரிமை' என்ற டிரம்ப்பின் கொள்கை பிடிவாதமாகவே உள்ளது.

மேலும், மனிதாபிமானமற்ற நாடு கடத்தல் நடவடிக்கைகள், வரி விதிப்புகள், 'யுஎஸ்எய்ட்' நிதி நிறுத்தம், ஐ.நா. மனித உரிமை கவுன்சில், உலக சுகாதார அமைப்பில் (டபிள்யூஹெச்ஓ) இருந்து அமெரிக்கா விலகல் உள்ளிட்டவற்றை டிரம்ப் அறிவித்தார். இதன் மூலம் சர்வதேச அளவில் பல்வேறு பாதிப்புகளையும், பின்விளைவுகளையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அவர் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் நற்பெயருக்குகளங்கம்ஏற்படுத்துவதுமட்டுமல்லாமல், உலக வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும். சட்ட விரோத குடியேறிகள் வெளியேற்றம் என்ற பெயரில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் வேதனையளிக்கும் விஷயம். எனவே, நாகரிக, ஜனநாயக உள்ள நாடுகளின் அரசுகளும், பிற ஜனநாயக சக்திகளும் அமெரிக்க அரசின் தற்போதைய மனிதாபிமானமற்ற, வெகுஜன விரோத நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்த வேண்டுமென குரல் எழுப்புவதைத் தவிர, வேறு வழியில்லை.

**(கட்டுரையாளர்: பொருளாதார நிபுணர்)**



காலைக்கதிர் Kalaikkathir

# தனங்கிளப்பு அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுகள்!

(சுபேசன்)

தென்மராட்சி - தனங்கிளப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 'செயற்பட்டுமகிழ்வோம்' நிகழ்வு பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.



பாடசாலை முதல்வர் உலகநாதன் தனசங்கர் தலைமையில் இடம்பெற்ற 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வில், வரணி ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலைய விரிவுரையாளர் நீ.தவராசா, யாழ்/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், தமிழ் இணையக் கல்விக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தருமான க.ரஜனிகாந்தன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.



நிகழ்வில், வினோத உடை, இசையும் அசைவும், சக்கர அஞ்சல் ஆகிய நிகழ்வுகள் சபையோரைக் கவர்ந்தன.

# வாலிப முன்னணியின் பொதுக்கூட்டம்

## கேள்வியெழுப்பிய அஷ்ரப் தாஹிர் எம்.பி

(றிபாஸ்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஒலுவில் கிரீன் வில்லாஹ் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



சம்மேளனத்தின் தலைவர் ஏ. மாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு நம்பிக்கையாளர் சபையின் தலைவர் ஐ.எல்.ஏ.மஜீத் பிரதம அதிதியாகவும், முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ. உதுமாலெப்பை கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டார்.

நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் தலைவராக ஏ.பைறுஸ், செயலாளராக எம்.எஸ். எம்.அஷ்ரப், பொருளாளராக எம். எச். ஜெயினுதீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எஃப்.றிபாஸுக்கு அமைப்பால் நாட்குறிப்போடு வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.






# சாய்ந்தமருதில் சமுர்த்தி சமுதாய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)





சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் மற்றும் சமுர்த்தி சமுதாய தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது பொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ, மஜீத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பொறுப்புக்களும் கடமைகளும் எனும் தலைப்பில் பிரதம பேச்சாளராக சாய்ந்தமருது பிரதேச செயலகத தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ,நஜீம் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா, சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், சமுர்த்தி வலய உதவியாளர் எம்.எஸ்.எம்.நௌஷாத், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 2023ஆம், 2024ஆம் ஆண்களில் சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அர்ப்பணிப்புடன் கடமையாற்றி சமுர்த்தி முகாமையாளர்களான எஸ்.றிபாயா, ஐ.எல்.எஸ். ஹிதாயா மற்றும் வலய உதவியாளர் எம்.எஸ்.எம்.நௌஷாத், சமுர்த்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.ஜாபீர், எம்.எம்.றஸானா, ஜே.எம்.றம்ஸா, எம்.ஐ.அன்சார், ஏ.எம்.அபுல்ஹுதா, எம்.எஸ்.றூருல் றிபா, எம்.ஆர்.எஸ்.ஷாமிலா, ஏ.எம்.காலிதீன் ஆகியோருக்கு அன்பளிப்புப் பரிசு வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர்.

மேலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பை கடந்த காலங்களில் சிறந்த முறையில் வழிநடத்தி நல்ல பல சமூக நலத்திட்டங்களை மேற்கொண்ட சமுதாயத் தலைவர்களான சிரேஷ்ட ஊடகர் எம்.ஐ.சம்சுதீன், ஏ.எம்.எம்.பசீல், இஸட்.எல்.முந்திறூன், எஸ்.எம்.முபிதா, எம்.ஏ,றஷீட், கே.எம்.கபீர், ஏ,எம்.நவாஸ், எம்.ஐ,அலாவுதீன் உள்ளிட்டோருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் செயற்பாட்டிற்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வரும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ,நஜீம் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் வேலைத்திட்டங்களை சிறப்பாக வழிநடத்தி 2023 ஆம் ஆண்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தேசிய விருதினைப் பெற்ற சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் உள்ளிட்டோரை சமுதாயத் தலைவர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.

நிகழ்வின் வரவேற்புரையினை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன் நிகழ்த்தியதுடன் நன்றியுரையினை சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.



# 'விடத்தல்தீவு அலிகார் வரலாற்று கருவூலங்கள்' புத்தளத்தில் சனியன்று நூல் வெளியீட்டு விழா






(சியாஜ்)

மன்னார் மாவட்டத்தின் மடு கல்வி வலயத்திற்குற்பட்ட விடத்தல்தீவு அலிகார் மஹா வித்தியாலயத்தின் வரலாறுகளை கொண்ட விடத்தல்தீவு அலிகார் வரலாற்று கருவூலங்கள் என்னும் தலைபைபிலான நுல் வெளியீட்டு விழா சனிக்கிழமை புத்தளம் தில்லையடி ஆர்ஜே மண்டபத்தில் இடம்பெற்றது.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் இணை செய்தி ஆசிரியரும், சிரேஷ்ட எழுத்தாளருமான சுஜப்.எம்.காசிம் இந்த நூலை எழுதியிருந்தார்.

வடக்கில் பிரபலமான பாடசாலையாக காணப்பட்ட அலிகார் பல்துறையாளர்களை உருவாக்கிய நிலையில் 90 களுக்கு முன்பும், அதற்கு பிற்பாடு வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் பின்பும் விடத்தல்தீவு அலிகார் மஹா வித்தியாலயத்தின் பதிவுகளை மையமாகக் கொண்ட இந்த நூலினை சுஜப்.எம்.காசிம் எழுதியுள்ளார்.

மேற்படி வெளியீட்டு விழா தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பணிப்பாளரும், கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலைய கணித பாட கருத்திட்ட உறுப்பினருமான எம்.ஏ.வாஹித் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் அதிதியாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதுடன், நூலினையும் வெளியிட்டு வைத்தார்.

இதேவேளை முன்னாள் நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமும், நூல் ஆக்க குழுவின் தலைவருமான ஏ .எம் .அமீன் வரவேற்புரையினை நிகழ்த்த நூலாசிரியர் பற்றிய விளக்கத்தினை வவுனியா பல்கலைக்கழக ஆங்கில துறை தலைவர் விரிவுரையாளர் பேராசிரியர் ஞானசீலன் வழங்கினார்.

நுலாய்வினை ஐக்கிய நாடுகள் சபை முன்னாள் இலங்கைக்கான வதிவிட பிரதி நிதியும் ,சிறந்த இலக்கியவாதியுமான ஏ.எல்.எ.அசீஸ் நிகழ்த்தினார். சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி அமீர் பாயிஸ் உள்ளிட்ட பலரும் இதன் போது உரையாற்றினர்.

அலிகார் மஹா வித்தியாலயத்தின் பழைய மாணவிகளால் பாடசாலை கீதம் இசைக்கப்பட்டது.

மேலும், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார் நூலாசிரியர் சுஜப்.எம்.காசிமுக்கு நினைவுச் சின்னம் ஒன்றினை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கண்டக்குளி குடா கடற்கரையில் 'கிளீன் சிறீலங்கா' தூய்மைப்படுத்தல்



(சியாஜ்)

ஆரோக்கியமான நாடு அழகான வாழ்க்கைஉள்ளடக்கிய கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் உல்லாசத்துறையை மேம்படுத்தும் வகையில் அழகான கடற்கரை எனும் கருப்பொருளில் கற்பிட்டி உதவி பிரதேச செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி தலைமையில்

கண்டக்குளி குடா கடற்கரையை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம்

கிராம உத்தியோகத்தர் எம்.பீ.எம் அர்ஷத் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ் நிஸ்வர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.டீ.எம் தாஸ் சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எச் ஹூஸ்னி, கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர், முப்படையினர் மற்றும்

கண்டக்குளி குடா பிரதேசவாசிகள் என சகல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்நின் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மேற்படி கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# அன்பின் முத்தங்கள் கவிதை நூல் அறிமுகம்

(அபு அலா, முபீன்(

அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் மகுடம் வி.மைக்கல் கொலினின் 'அன்பின் முத்தங்கள்' கவிதை நூல் அறிமுக விழா சனிக்கிழமை திருகோணமலை ஸ்ரீபத்திர காளியம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெற்றது.




அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் க.மகேசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக கிழக்குமாகாணகல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதனும், கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் நா.மணிவண்ணனும், அழைப்பு விருந்தினராக ஊடகவியலாளர் திருமலை நவம் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

'அன்பின் முத்தங்கள்' நூலின் முதன்மை பிரதியை திருகோணமலை ஸ்ரீபத்திரகாளியம்பாள் தேவஸ்தான பிரதம குருவும்





ஆதீனகர்த்தாவுமான சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திர குருக்கள் பெற்றுக்கொண்டார்.

அடுத்த பிரதியை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலனசபைத்தலைவரும்சட்டத்தரணியுமான திலகரத்தினம் துஷியந்தன் பெற்றுக் கொண்டார்.

அன்பின்பாதைஎண்ணம்போல்வாழ்க்கைகலை இலக்கிய மன்றம் பல இலக்கியவாதிகளையும், எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களின் நூல்களை அறிமுகம் செய்துவைத்து அவர்களின் எழுத்துத்திறனின் ஆர்வங்களை மேன்மேலும் தூண்டச் செய்து வருகின்றனர். இது அவர்களின் 30 ஆவது நூல் அறிமுக விழா என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இன்னும் மறக்கவில்லை.

தற்போதுள்ள நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி குறுகிய அரசியல் இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் தரப்பினரை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எந்தவித சிக்கல்களும் கிடையாது. இந்த விடயம் தொடர்பில் எமது முப்படை உரிய நடவடிக்கை எடுக்கும் என நாம் நம்புகிறோம் என்றார்.

## பொலிஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையெழுத்துடன் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பெப்ரவரி 19 கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்குள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலின் கீழிருந்த சந்தேகநபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து பெப்ரவரி 21 இரவு பொலிஸ் காவலின் கீழிருந்த 2 சந்தேநபர்கள் தப்பிக்க முற்பட்டனர் எனக்கூறி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்கள் இருவரும் அன்றைய தினம் கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

நாட்டின் சட்டவாட்சி மீது வலுவான அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ள இத்தொடர் சம்பவங்கள் குறித்து நாம் தீவிர கரிசனையடைகின்றோம். சட்டக்கட்டமைப்பின் மீது பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்கக்கூடிய இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்குப் பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட சட்ட அமுலாக்கப் பிரிவினர் பெரும் அவதானத்துடனும், மிகுந்த பொறுப்புடனும் செயற்படவேண்டியது அவசியமாகும்.

அதேவேளை கடந்த காலங்களிலும் இதுபோன்ற பொலிஸ் காவலின் கீழான கொலைகள் இடம்பெற்றதுடன், அவை தொடர்பில் முறையான விசாரணைகளோ அல்லது குற்றவாளிகளை நீதியின்முன் நிறுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்படவில்லை என்பதை கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றோம். இவ்விடயத்தில் சட்ட அமுலாக்க அதிகாரிகளால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் விளைவாக, தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு மேலோங்கியிருப்பதாக அரசின்மீது குற்றஞ்சுமத்தும் நிலை தோற்றம்பெற்றுள்ளது. அதுமாத்திரமன்றி இத்தகைய தோல்வி நாட்டின் நீதி நிர்வாகம் கேள்விக்கு உட்படுத்தப்படுவதற்கும், அதன் செயற்திறன் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழப்பதற்கும் வழிகோலியுள்ளது.

நீதிக்குப் புறம்பான சட்டவிரோத படுகொலைகள் ஒருபோதும் அதிகரித்துவரும் குற்றச்செயல்களுக்கான தீர்வாக அமையாது. மாறாக அரசு சட்டத்தின் ஆட்சிக்கு அமைவாக இயங்குவதன் ஊடாகவே குற்றங்களைக் கட்டுப்படுத்தமுடியும்.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்ட இரண்டாவது சம்பவத்தில் பொலிஸ்காவலின் கீழிருந்த இரண்டு சந்தேநபர்களும் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பது குறித்து உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறு நாம் பதில் பொலிஸ்மா அதிபரை வலியுறுத்துவதுடன், இத்தகைய மிகப்பாரதூரமான பொலிஸ்காவலின் கீழான கொலைச்சம்பவங்கள் மீண்டும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் பொலிஸ்காவலின் கீழான கொலைகள் மற்றும் சட்டவிரோத படுகொலைகளை முழுமையாக முடிவுக்குக்கொண்டுவருவதற்கு, அச்சம்பவங்களுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமாகும். அது சட்டவாட்சியை வலுப்படுத்துவதற்கும், நீதிக்கட்டமைப்பின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மீளுறுதிப்படுத்துவதற்கும் இன்றியமையாததாகும்.

அதன்படி இச்சம்பவம் தொடர்பான விசாரணை செயன்முறைகளை நாம் உன்னிப்பாகக் கண்காணிக்கவிருப்பதுடன், நாட்டின் சட்ட அமுலாக்க செயன்முறையின் ஊடாக பொதுமக்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்றுள்ளது.

## கணேமுல்ல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறையில் பணியில் இருந்த கெசல்வத்த பொலிஸை சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஹேவாபதிரணகே தரங்க சாட்சி வழங்கிய நிலையில், சம்பவம் நடந்த அன்று நீதிமன்ற நடவடிக்கைகள் காலை 9.30 அல்லது 9.35 மணியளவில் ஆரம்பித்ததாக தெரிவித்தார்.

அன்று ஸ்கைப் தொழில்நுட்பத்தின் மூலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களின் விளக்கமறியல் காலத்தை நீட்டிக்கும் செயற்பாடு இடம்பெறவிருந்தது. காலை 9:40 மணியளவில் நீதிமன்ற அறையின் மூடப்பட்டிருந்த கதவைத் திறந்து, இரண்டு சிறை அதிகாரிகள் சந்தேகநபர் ஒருவரை திறந்த நீதிமன்றத்திற்குள் அழைத்து வந்தனர். ஒரு சிறை அதிகாரி என்னிடம் வந்து, 'கணேமுல்ல சஞ்சீவவை அழைத்து வந்துள்ளோம்' என்று கூறினார். நான் சந்தேகநபரை சிறைக் கூண்டிற்குள் வைக்கச் சொன்னேன்.

அப்போது சிறை அதிகாரி, 'இந்தச் சந்தேக நபருக்கு பகைவர்கள் இருப்பதால், கூண்டிற்குள் வைக்கமுடியாது' என்றுகூறினார். பின்னர் அவரை பெஞ்சில் உட்கார வைக்கச் சொன்னேன். நீதிவான் கேட்டால், நீங்களே காரணங்களை விளக்குங்கள் என்று நான் சிறை அதிகாரியிடம் கூறினேன்.

பின்னர் இந்தச் சந்தேகநபரை பெஞ்சில் உட்கார வைத்தார்கள். ஏறக்குறைய முப்பது வழக்குகள் ஸ்கைப் தொழில்நுட்பத்தின் மூலம் எடுக்கப்பட்ட பிறகு, ஸ்கைப் இணைப்பு துண்டிக்கப்பட்டது. பின்னர் கணேமுல்ல சஞ்சீவவின் வழக்கு அழைக்கப்பட்டது. பிரதிவாதி சாட்சிக் கூண்டிற்கு முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அப்போது நீதவான், சந்தேகநபர் கணேமுல்ல சஞ்சீவவிடம், வழக்குக்கு பிணை இருந்ததா என்று விசாரித்தார். அப்போது கணேமுல்ல சஞ்சீவ, 'பிணை இல்லை' என்று கூறினார். அந்த சந்தர்ப்பத்தில் நீதிவான், சிறை அதிகாரியிடம், 'நீதிமன்ற உத்தரவு இல்லாமல் இந்தச் சந்தேகநபரை ஏன் அழைத்து வந்தீர்கள்?' என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்க சிறை அதிகாரி முன்னால் வந்தார். அவரால் 'ஒன்பது' என்ற வார்த்தையை மட்டுமே சொல்ல முடிந்தது. திடீரென மூன்று அல்லது நான்கு துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. உள்ளே இருந்தவர்கள் கத்த ஆரம்பித்தனர். சட்டத்தரணி உடையணிந்த ஒரு நபர் சாட்சிக் கூண்டு பக்கம் திரும்பி ஏதோ செய்வதைப் பார்த்தேன். அதனுடன்தான் துப்பாக்கிச் சத்தங்கள் வந்தன. அந்த நபரின் முகத்தை நான் பார்க்கவில்லை. அவர் நீல நிற டையை அணிந்திருந்தார். பின்னர் அந்த நபர் கதவைத் திறந்து வெளியே தப்பி ஓடினார். அவர் கையில் எதுவும் இருக்கவில்லை. பின்னர் நான் நீதிவான் இருக்கை பக்கம் பார்த்தேன். அங்கு நீதிவான் இருக்கவில்லை.

பின்னர் நாங்கள் தேடி பார்த்தோம். நீதிவான் பெஞ்சுக்கு அடியில் மறைந்து இருந்தார். பின்னர் நாங்கள் அவரை பாதுகாப்பாக அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றோம். நீதிவான் அதிர்ச்சியடைந்திருந்தார். பின்னர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான சந்தேகநபர் கணேமுல்ல சஞ்சீவ சாட்சிக் கூண்டிற்குள் மேலே தலை தூக்கியவாறு விழுந்து கிடந்தார் - என்று சாட்சி வழங்கினார்.

## தோட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவு திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு 7322 மில்லியன் ரூபாவை ஒதுக்கிவிட்டு, அதனைப் பெருமையாகப் பேசிவருகின்றனர்.

அதில் 3500 மில்லியன் ரூபா வீட்டு திட்டத்துக்காக ஒதுக்கி இருப்பதாக தெரிவிக்கின்றபோதும் அது இந்திய அரசால் ஒதுக்கப்பட்டதாகும். அதேபோன்று ஸ்மாட் வகுப்பறைக்கு 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தாலும் அதுவும் இந்திய அரசானால் ஒதுக்கப்பட்டதாகும். அது தவிர தோட்ட உட்கட்டமைப்புக்காக ஆளும்தரப்பு 1800 மில்லியன் ரூபா ஒதுக்கி இருக்கிறது. புதிய கிராம வேலைத் திட்டத்துக்கு என 50 இலட்சம் ரூபா ஒதுக்கி இருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் ஆளும்தரப்பு தோட்ட மக்களுக்கு ஒதுக்கி இருப்பதாக தெரிவிக்கும் 7322 மில்லியன் ரூபாவில் 4100 மில்லியன் ரூபா இந்திய அரசால் ஒதுக்கப்பட்டதாகும். அதாவது நூற்றுக்கு 56வீதம் இந்திய அரசாங்கத்தின் நிதியாகும். வீட்டுத்திட்டத்துக்கான இந்திய அரசாங்கத்தின் 3500 மில்லியன் ரூபாவும் நாங்கள் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி பெற்றுக்கொடுத்ததாகும். அந்த பெருமை எங்களுக்கே சேரவேண்டும்.

அத்துடன் ஆளும்தரப்பில் இருக்கும் மலையகத்தைச் சேர்ந்தவர்களும் மலையகம் அல்லாத தமிழ் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களும மலையக அரசியல்வாதிகளை குறைசொல்லிவருகின்றனர். அவர்கள் அதனை நிறுத்தவேண்டும். தமிழ் முற்போக்கு கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் மலையகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம்.

நுவரெலியா மாவட்டத்தில் 6 புதிய பிரதேச சபைகளை உருவாக்கி இருக்கிறோம். புதிய பிரதேச செயலகத்தை நுவரெலியா மாவட்டத்தில் ஏற்படுத்தி இருக்கிறோம். அதேபோன்று தோட்ட மக்களுக்கு 7 பேர்ச் காணி பெற்றுக்கொடுக்க அமைச்சரவையின் அனுமதி பெற்றுக்கொண்டு அதனை நாங்களே பெற்றுக்கொடுக்க ஆரம்பித்தோம். கடந்த ஆளும்தரப்பின் காலத்தில் அது 10 பேர்ச்சாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காணிகளில் நாங்கள் தனி வீடு கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். அவ்வாறு தனி வீடுகளை கட்டி அவற்றை மலையக தமிழ் கிராமங்களாகப் பிரகடனப்படுத்த இருந்தோம்.

மலையக அபிவித்திக்காக தனியான அதிகாரசபையை உருவாக்கி இருக்கிறோம். ஆனால் அந்த அதிகாரசபைக்கு 500 இலட்சம் ரூபா மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பெருந்தோட்ட தொழிலாளர்கள் என்ற பெயரை மாற்றி, மலையக மக்கள் தேசிய இனம் என்பதை சர்வதேச ரீதியில் நாங்கள் பிரகடனம் செய்திருக்கிறோம். குடிசன புள்ளிவிபர மதிப்பீட்டிலும் மலைய மக்களின் புள்ளிவிவரங்களை பதிவு செய்யும்போது இந்திய தமிழ் மக்கள் என்றே பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதனை மாற்றியமைத்து மலையகத் தமிழர் என கொண்டுவந்திருக்கிறோம். நாங்களே அதனைச் செய்தோம். ஆளும்தரப்-பு அதனை முன்னெடுத்திருப்பதையிட்டு சந்தோஷப்படுகிறோம். மேலும் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அது இடம்பெறப்போவதில்லை. அவ்வாறு செய்வதாக இருந்தால் தோட்டங்களில் முறை மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் மலையக மக்களுக்கு உடனடியாக வீடுகளை கட்டிக்கொடுக்கவேண்டும் என நாங்கள் கேட்பதில்லை.

மாறாக அவர்களுக்கு நாங்கள் 7 பேர் காணி கொடுத்தோம். அதேபோன்று ஆளும்தரப்பு காணி கொடுக்கப்போகிறதா அல்லது வீடு கட்டிக்கொடுக்கப்போகிறா? அது தனி வீடா, மாடி வீடா என்பதை தெரிவிக்க வேண்டும். அதனை தெரிவிக்காமல் 33 வருடங்களுக்கு முன்னர் இறந்த ரணசிங்க பிரேமதாச மலையகத்துக்கு வீடு கட்டிக்கொடுக்க தவறியமைக்காக மன்னிப்பு கோரவேண்டும் எனத தெரிவிப்பது குறித்து வெட்கப்படுகிறேன். ஆளும்தரப்பு வெறுமனே பேசிக்கொண்டிருக்காமல் மலையக மக்களின் வீட்டுக்கொள்கை அல்லது காணிக் கொள்கை என்ன என்பதை தெரிவிக்க வேண்டும் என்றார்.

## வறண்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவு என்பது இலாபமாகவோ அல்லது மீதியாகவோ செல்வதில்லை. எங்களை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டுமானால், சில திருத்தங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும். ஆனால் அதற்கு நாங்கள் விரும்பவில்லை. மின்சார சபை எப்போதும் 140 பில்லியன் ரூபாய் இலாபம் என்று கூறுகிறது. எப்போதும் அந்த பொய்யைச் சொல்கிறார்கள். மின்சார சபைக்கு இலாபம் இல்லை, ஒவ்வொரு காலாண்டிலும் விலை மாறும்போது ஒரு மீதி வருகிறது. முந்தைய 6 மாதங்களின் மீதியை அடுத்த 6 மாதங்களுக்குள் எடுத்துக்கொள்கிறோம்.

அதன் மூலம்தான் ஒரு முன்னறிவிப்பு செய்யப்படுகிறது. அந்த முன்னறிவிப்பைச் சொல்லும்போது, மீதமுள்ள தொகையை செலவு செய்த பின்னரே எடுக்கிறோம். அதனால் ஆண்டு முடிவில் இலாபம் எதுவும் மீதியாக இருப்பதில்லை. கடந்த ஆண்டு 140 பில்லியன் இருந்தது, அது செலவுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

அதில் 46 பில்லியன் மட்டுமே மீதியாக வந்தது. அந்த 46 பில்லியனை இதில் சேர்த்தால், இந்த 6 மாதங்களில் 42 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இந்த வறட்சி அதிகரித்தால் அது மேலும் அதிகரிக்கும் என்றார்.

## பதில் பொலிஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதய கம்மன்பில கேள்வி எழுப்பினார்.

பிவிதுரு ஹெல உருமய அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

கணேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதற்கு முதல் வாரம் கம்பஹா நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட இருந்தார். அபபோது அவர் மீது துப்பாக்கிச் சூட மேற்கொள்ளப்படவிருந்ததாக தனக்கு தகவலொன்று கிடைத்ததாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக அன்றைய தினம் மெய்நிகர் ஊடாக அவரை வழக்கு விசாரணைகளில் முன்னிலைப்படுத்தியதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். கம்பஹா நீதிமன்றத்தில் சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படவிருந்தமைக்கான காரணம் அந்த நீதிமன்றத்தின் மீதுள்ள கோபத்தால் அல்ல, சஞ்சீவ மீதிருந்த கோபத்தினாலாகும்.

கம்பஹா நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதலுக்கான சந்தர்ப்பத்தை பொலிஸார் தடுத்துள்ளனர் என்பதால், அதனைக் கொழும்பு நீதிமன்றத்தில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம் என்பதை ஊகிப்பதற்கு பெரும் புலமை தேவையில்லை. ஆனால் தகவல் கிடைத்திருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத பதில் பொலிஸ்மா அதிபர், கணேமுல்ல சஞ்சீவ கொல்லப்படுவதற்கு இடமளித்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றார்.

கொழும்பிலும் சஞ்சீவ மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என பதில் பொலிஸ்மா அதிபர் சிந்திக்காமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. சஞ்சீவ மீது இலக்கு வைத்தவர்கள் கைது செய்யப்படும்வரை அவருக்கான அச்சுறுத்தல் நீங்கவில்லை என்பதையும் பதில் பொலிஸ்மா அறிந்திருப்பார். அந்த வகையில் இந்தக் கொலையில் பதில் பொலிஸ்மா அதிபருக்கும் தொடர்பிருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் எமக்கு ஏற்படுகிறது.

அவ்வாறெனில் பதில் பொலிஸ்மா அதிபர் மீது யார் நடவடிக்கை எடுப்பது? பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கே அந்த அதிகாரம் காணப்படுகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 12 நாட்களுக்கு முன்னரே தகவல் கிடைத்திருந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறிய ரவி செனவிரத்னவுக்கே இந்த பொறுப்பு காணப்படுகிறது. இவர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருக்கும்வரை புலனாய்வு தகவல்கள் கிடைத்தாலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமலிருக்கும் நோய் ஒருபோதும் குணமடையப் போவதில்லை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# முஸ்லிம் காங்கிரஸில் எவருமே மக்களை பற்றி சிந்திக்கவில்லை

## எஹியாகான் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

முஸ்லிம் சமூகத்திற்கு எவ்வித பயனும் தராத, காணிகளை மீட்க திராணியற்ற, கல்முனை நகர அபிவிருத்திக்குத் தடையாக இருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதை உணர்ந்து நான்கு ஆண்டுகளாக சிந்தித்து கொண்டிருந்து இப்போது அங்கிருந்து வெளியேறியிருக்கிறேன். என்னுடைய பிரதிப்பொருளாளர் பதவி அடங்கலாக கட்சியின் பதவிகளை இதுவரை துறக்கவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்பினால் என்னை நீக்கிக்கொள்ளட்டும் என ஐக்கிய மக்கள் காங்கிரஸின் பொது செயலாளர் ஏ. சி.எஹியாகான் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் ஐக்கிய மக்கள் காங்கிரஸின் அலுவலகத்தை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து விட்டு ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அங்கு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு பேசிய அவர் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் அமைச்சராக இருந்தும் கல்முனைக்கு எவ்வித அபிவிருத்திகளும் நடக்கவில்லை. கல்முனையை அபிவிருத்தி செய்ய முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் எடுத்த எத்தனங்களை அவர்களே தடுத்தார்கள். கடந்த பொதுத்தேர்தலிலும் தங்களின் ஆமாம் சாமிகள் அவர் கூட தேர்தலில் களமிறங்கினால் அவர்கள் தோற்று ஹரீஸ் வென்றுவிடுவார் என்பதற்காக ஹரிஷை தேர்தலில் களமிறங்க விடாமல் சதி செய்து தடுத்தார்கள். இந்த முஸ்லிம் காங்கிரஸில் யாரும் மக்களை பற்றி சிந்திக்க முடியாது. அவ்வாறு சிந்தித்தவர்கள் வெளியேறிவிட்டார்கள். அல்லது வெளியேற்றப்படுகிறார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் கடந்த 15 வருடங்களாக இணைந்து பயணித்துள்ளேன். மறைந்த மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்த கட்சியை எமது சமூகத்தின் இருப்புக்காகவும், பிரதேச அபிவிருத்திக்காகவும் உருவாக்கினார். ஆனால் இப்போதுள்ளவர்கள் தமது கஜானாக்களை நிரப்புவதற்காக இதனை பாவித்து வருகின்றனர். நான் இக்கட்சியால் பல்வேறு வெட்டுக் குத்துக்களையும் ஏமாற்றங்களையும் நேரடியாக சந்தித வனாகக் காணப்படுகின்றேன். எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு எந்த எண்ணமுமில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்று அரசியலை செய்து வருகின்றது .

கூஜா தூக்கியவர்களுக்கு சாமரம் வீசும் வேலையை செய்வதையே முஸ்லிம் காங்கிரஸ் தலையாய கடமையாக கொண்டுள்ளது. இதனால் தான் மக்கள் அவர்களையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸையும் இன்னும் பல பாரம்பரிய கட்சிகளையும் நிராகரித்து தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரண்டார்கள். நாங்களும் அவர்களுக்கு தேவையாயின் ஒத்துழைப்பு நல்கத் தயாராக இருக்கிறோம். எங்கள் தொகுதிக்கு கிடைத்த தேசிய பட்டியல் எம்.பிக்கு ஆலோசனை வழங்கத் தயாராக இருக்கிறோம். எங்களுடன் ஒன்றாக இருந்த துரோகிகள் எங்களை பல இடங்களில் காட்டிக்கொடுத்து பதவிகளை பெற்றுக்கொண்டார்கள்.

எனவே தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி நாட்டை நேசிக்கும் சிறந்த மக்கள் தலைவரும் அரசியல் செயற்பாட்டாளருமான முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் உருவாகியுள்ள குறித்த கட்சியின் பொதுச்செயலாளராக மக்களுக்கு சேவையாற்றவுள்ளேன்.



ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் காரியாலயங்களில் ஒன்று சாய்ந்தமருதில் தற்போது திறந்துவைக்கப்பட்டுள்ளது.நாட்டிலுள்ள அநேகமான கட்சிகள் மீது மக்கள் வெறுப்புற்றுள்ளனர் எனவும் மக்களது நலனுக்காக மக்களது வாக்குகளைப் பெற்று எதிர்க்கட்சிகளில் இருக்கும் சில அரசியல்வாதிகள் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்க்கும் மனோ நிலையில் இருக்கின்றனர் எனவும் அவ்வாறான நிலை மாறி நாட்டையும் மக்களையும் பற்றி யோசிக்க கூடிய சிறந்தவர்கள் தங்களது கட்சியின் பக்கம் அணிதிரள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களிலும் திருகோணமலை உட்பட இன்னும் சில மாவட்டங்களிலும் நாங்கள் களமிறங்க தயாராகி வருகிறோம்.சுசந்த புஞ்சிநிலமே பிரதி அமைச்சராக இருந்த காலங்களில் இன மத வேறுபாடின்றி அனைத்து மக்களதும் நாட்டினதும் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டவர். எனவே நாட்டுப்பற்றுள்ள அனைத்து மக்களும் இன மத பேதமின்றி தங்களுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு ஐக்கிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஏ.சி.எஹியாகான் தெரிவித்தார்.



# வட்டக்கண்டல் பாடசாலை மாணவி சர்வதேசப் போட்டியில் 2ஆம் இடம்

(சியாஜ்)



சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற தேசிய மட்ட சித்திர போட்டியில் புத்தளம் வட்டக்கண்டல் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி சமீம் பாத்திமா சப்தா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான பரிசளிப்பு வைபவம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# வாளுடன் சந்தேகநபர் கைது சம்மாந்துறையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

வாள் ஒன்றை உடைமையில் மறைத்து வைத்திருந்த சந்தேக நபரை கைது செய்து சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் இரவு வேளையில் சம்மாந்துறை பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 39 வயதுடைய சந்தேக நபர் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மலையடிக்கிராமம் 01 பகுதியில் வைத்து சென்னல்கிராமம் 02 பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் 2 அரை அடி நீளமான வாள் ஒன்றும் சந்தேக நபர் வசம் இருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலும் சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்த வருகின்றனர்.

குறித்த கைது நடவடிக்கை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸார் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கற்பிட்டி பள்ளிவாசல்துறை களப்பு தூய்மைப்படுத்தல்

(சியாஜ்)

அழகான கடற்கரை கவர்ச்சிகரமான சுற்றுலா தளம் எனும் கருப்பொருளில் கற்பிட்டி பள்ளிவாசல்துறை களப்பு கடற்கரையை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் கிராம உத்தியோகத்தர் திருமதி றினோஸா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல்துறை தேசிய மக்கள் சக்தி நிர்வாகக் குழுவினர், பிரதேசவாசிகள் என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை மாநகர சபையில் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின்கீழ் உள்ள பொது நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று (திங்கட்கிழமை) கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பொது நூலகத்தின் நூலகர் முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாகவும் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் கௌரவ அதிதியாகவும் கலந்துசிறப்பித்தனர்.

இதில் கல்முனை வலயக் கல்வி பணிமனை ஆசிரிய ஆலோசகர் எம். லக்குணம், சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டு வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்.

இதன்போது 2024 - தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை பொது நூலகங்களால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் நூலகங்களை சிறந்த முறையில் தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகின்ற சிரேஷ்ட வாசகர்கள் பலருக்கு இதன்போது விருதுகள் வழங்கபட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நற்பிட்டிமுனை பொது நூலகத்தால் தொகுக்கப்பட்ட சிறப்பு மலர் ஒன்றும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலகர் எஸ்.எம்.ஆர். அமீனுத்தீன் இதனை அறிமுகம் செய்து வைத்தார்.

மருதமுனை பொது நூலகத்தின் நூலகர் ஏ. சி. ஹரீஷா சமீம் நன்றியுரை நிகழ்த்தினார்.









# அதிகமான கலைத்திறன்களை ஒரேநேரத்தில் முடித்து சாதனை

(சியாஜ்)

வெற்றிகரமாக பென்சில் ஓவியங்களை 45 நபர்கள் 15 நிமிடங்களில் வரைந்தும் அதே நேரத்தில் பலரும் மணமகள் அலங்காரம், கேக் தயாரிப்பு, ஆரி வேலை வடிவமைப்பு, அழகு சாதன வடிவமைப்பு, ஓவியம், நகக் கலை, ரெசின் கலை மற்றும் மெஹந்தி கலை போன்ற துறைகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

சோழன் புத்தகம் உலக சாதனைகள் இந்த அபூர்வ சாதனையை முதன்முறையாக அங்கீகரித்து, கலை உலகில் ஒரு புதிய மைல்கல்லாக பதிவு செய்துள்ளது. இந்த மாபெரும் நிகழ்வு கலைத்திறனின் எல்லையற்ற தருணத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த வரலாற்றுச் சாதனை ஞாயிற்றுக்கிழமை கொழும்புடியூட்ராப்எனும்இடத்தில்நடைபெற்றது. ஹஸ்மா பிரைடல் அன்ட் அகாடமி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவுநர் திருமதி ஹஸ்மாவின் தலைமையில் இந்த அதிசய நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்றது.

சிபிடபிள்யுஆர் தனது மனமார்ந்த வாழ்த்துகளை சாதனையாளர்களுக்கும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது. இவர்களின் திறமை, ஆர்வம் மற்றும் கலைப் பொலிவை கொண்டாடுகிறோம். இந்த சாதனை உலகம் முழுவதிலும் உள்ள இளம் கலைஞர்களுக்கு ஊக்கமாக அமைந்து, அவர்களை தங்கள் சாதனைகளை மேம்படுத்த முன்வைக்க ஊக்குவிக்கிறது.






# மெய்வன்மை போட்டி

(றிபாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி லீடர் அஸ்ரப் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எல். பதியூத்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் பிரதம அதிதியாகவும், கல்முனைமாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்களான சீ.எம்.முபீத், எம்.எல்.சாலித்தீன் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பணிப்பாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளருமான சட்டத்தரணி சீ. எம். ஹலீம் விசேட அத்தியாகவும் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் பதக்கம், சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.



# இரண்டாம்மொழி கற்கை இறுதிக் கலை நிகழ்வு



(பாறுக் ஷிஹான்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் (நிலட்) அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட 100 மணித்தியாலம் மற்றும் 150 மணித்தியாலங்கள் இரண்டாம் மொழி பயிற்சி நெறியை பூர்த்திசெய்த அரச உத்தியோகத்தர்களின் இறுதி கலை நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மருதூர் கொத்தன் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

தேசியமொழிக்கல்வி மற்றும்பயிற்சி நிறுவனத்தின் இரண்டாம் மொழி வளவாளர் ஐ.எம்.அபூல் ஹசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எம். ஹிர்பகான் கல்முனை சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான ஹாதி இஸ்மாயீல் சிறைச்சாலை உத்தியோகத்தர் எம்.எம். முஹம்மட் நகீப் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் குறித்த நிகழ்வில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறிகளை பூர்த்தி செய்த பயிலுநர்களால் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு சிறப்பாக இடம்பெற்றன.





2020 ஆண்டு அரச கரும மொழி அமைச்சால் வெளியிடப்பட்ட 18 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக அரச உத்தியோகத்தர்களின் மொழி புலமையை விருத்தி செய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நெறி என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த பாடநெறியை சூம் (நிகழ்நிலை) தொழிநுட்பம் ஊடாக நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பயனடைந்ததுடன் இப்பாடநெறி ஊடாக சமூக நல்லிணக்கம் பயிலுனர்களிடையே ஏற்பட்ட சம்பவம் இறுதி நிகழ்வில் தெளிவாகியமை சுட்டிக்காட்டத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.02.2025இல் வெளியிடப்பெற்றது